<table>
<tr><td colspan="2" align="center">

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் , இராதாபுரம்.**

**முன்னிலை - திரு. V.C. குபேரசுந்தர், M.A., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.**

**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 10 ஆம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 122/2020**

**CNR No. TNTL 260004992020**

</td></tr>
<tr><td>தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>இராதாபுரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.83/2016.</td><td align="right">... குற்றமுறையிட்டாளர்</td></tr>
<tr><td colspan="2" align="center">/எதிர்</td></tr>
<tr><td>தளவாய்சுந்தரம், வயது 39/2016,<br>த/பெ. மாசானமுத்து தேவர்,<br>கீழத்தெரு,<br>இளையநயினார்குளம் தெக்கூர்.</td><td align="right">.... குற்றஞ்சாட்டப்பட்டவர்</td></tr>
</table>

இவ்வழக்கானது வள்ளியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், C.C. No:46/2017 ஆக 17/02/2017-ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்த சூழ்நிலையில் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, திருநெல்வேலி ஆணை எண். 766/2019 தேதி 21/11/2019-ன் பிரகாரம் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 27/01/2020-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 08/06/2026-ம் தேதி வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 அவர்களும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.P.மோசஸ் மெர்வின், B.A.,B.L., அவர்களும் ஆஜராகி, இருதரப்பும் கேட்கப்பட்டு

ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | இராதாபுரம் காவல் நிலையம் குற்றஎண். 83/2016 | |
|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | தளவாய் சுந்தரம் |
| | | தந்தை பெயர் | மாசானமுத்து தேவர் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | இளையநயினார்குளம் தெக்கூர் |
| | | வயது | 39/2016 |
| 2 | சம்பவ தேதி | | 30/04/2016 |
| 3 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 17/02/2017 |
| 4 | கைது | | 25/05/2016 |
| 5 | பிணையில் விடுவித்ததல் | | 25/05/2016 |
| 6 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | | 19/04/2017 |
| 7 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 08/03/2022 & 17/03/2026 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 12/04/2022 & 08/06/2026 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 12/04/2022 & 12/04/2022 |
| | அ.சா.4 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 16/08/2022 & 16/08/2022 |
| | அ.சா.5 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 20/12/2022 & 20/12/2022 |
| | அ.சா.6 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 20/12/2022 & 20/12/2022 |

| | | |
|---|---|---|
| | அ.சா.7 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 01/08/2023 & 01/08/2023 |
| | அ.சா.8 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 23/04/2024 & 23/04/2024 |
| | அ.சா.9 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 08/10/2024 & 08/10/2024 |
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 24/10/2024, 08/06/2026 |
| 9 | விசாரணை முடிவு | 08/06/2026 |
| 10 | தண்டனை அல்லது உத்தரவு | 10/06/2026 |
| 11 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு /முடிவு | 10/06/2026 |
| 12 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) <u>**குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்**</u>:

கடந்த 30.04.2016 ம் தேதி காலை 06.30 மணியளவில் இளையநயினார்குளம் தெக்கூர் கீழத்தெருவில் உள்ள 1வது சாட்சியின் வீட்டிற்குள் நீழ் அத்துமீறி நுழைந்து 1 வது சாட்சி லெட்சுமியிடம் தனக்குரிய இடத்தை தனக்கு விட்டுக்கொடு இல்லையென்றால் நடப்பது வேறு என்று மிரட்டவும் 1 வது சாட்சி எதிரியை வெளியே தள்ளிவிட்டுள்ளதாகவும் வெளியே விழுந்த எதிரி 1வது சாட்சியை பார்த்து என்னையா வெளியே தள்ளிவிட்டாய் உன்னை என்ன செய்கிறேன் என்று பார் தேவடியா என்று அசிங்கமாக ஏசிகொண்டு அங்கு கிடந்த உடங்கம்பை எடுத்து 1 வது சாட்சியின் வலது கை புஜத்திலும் இடது காதிலும் அடித்து சிறுகாயங்கள் உண்டுபண்ணியும் கம்பை காட்டி இன்று நீ தப்பிவிட்டாய் என்று நினைக்காதே உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி கொலைமிரட்டல் செய்தும், 1வது சாட்சிக்கு அவமானத்தையும் உயிர்பயத்தையும் ஏற்படுத்தியதாக

உள்ள குற்றம் புரிந்து ஊமைக்காயத்தையும் ஏற்படுத்தினார், மீண்டும் சாட்சி 1ஐ அடிக்க வர சாட்சி 1 விலகவும் உடை கம்பிலுள்ள முள் சாட்சி 1ன் இடது காதின் முன்பகுதியில் லேசாக கிளித்ததாகவும் அங்கு வந்த சாட்சி 1ன் மகள்கள் தில்லையம்மாளும், அய்யம்மாளும் சத்தம் போடவும் கம்புடன் நின்றிருந்த தளவாய் கம்பை கீழே போட்டுவிடப்பட்டு இன்று தப்பித்து விட்டாய் அடித்து கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக இராதாபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீத இ.த.ச. பிரிவுகள் 452,294(பி),323,506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டப் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **<u>எதிரிக்கு கு.வி.மு. ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல் :</u>**

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

3) **<u>குற்றச்சாட்டு வனைதல்</u>**

எதிரிக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 452,294(பி),323,506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டப்படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4) **<u>அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:

அ.சா.1 லெட்சுமி தனது சாட்சியத்தில் நான் தற்போது இளையநயினார் குளத்தில் வசித்து வருகிறேன், கூலி வேலை பார்க்கிறேன், ஆஜர் எதிரியை தெரியும், தனது கணவரின் சகோதரர், தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, எனக்கு படிப்பறிவு இல்லை, அதனால் ஞாபகம் இல்லை, ஒரு நாள் ஆஜர் எதிரி தனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என்னை பார்த்து தேவடியா, பலவட்டறை என அவதூறான வார்த்தைகளால் பேசி, கம்பை கொண்டு வலது பக்க தோளிலும் அடித்து ஊமைக்காயம் ஏற்படுத்தியதாகவும், என்னை பெண் என்றும் பாராமல் அசிங்கமாகவும், தர குறைவாகவும் பேசினார், அந்த நேரத்தில் வீட்டில் யாருமில்லை, எதிரி அடித்ததில் வலி இருந்ததால் தான் ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு சென்றேன், அங்கு வந்த போலீசார் நடந்த சம்பவத்தினை புகார் வாக்குமூலமாக எழுதி பெற்றனர், காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து தன்னுடையது தான், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) அ.சா.2 தில்லையரசி தனது சாட்சியத்தில் நான் தற்போது பார்க்கனேரியில் வசித்து வருகிறேன், இல்லத்தரசியாக இருக்கிறேன், எதிரி தளவாய் சுந்தரம் எனது சித்தப்பா, அ.சா.1 தனது அம்மா, கடந்த 30.04.2016 அன்று காலை 6.30 மணிக்கு எனது வீட்டில் நானும் எனது அம்மா லெட்சுமியும், எனது தங்கை அய்யம்மாளும் இருந்த போது எதிரி ஒரு இரும்பு கம்பியை எடுத்து வந்து எனது அம்மாவின் கையில் அடித்தார், வலி தாங்க முடியாமல் எனது அம்மா கீழே விழுந்துவிட்டார், எதிரி எங்களை பார்த்து தேவடியா சிறுக்கிகள் என அசிங்கமாக ஏசினார், பின்பு தானும் எனது தங்கையும் தனது அம்மாவினை ராதாபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்து சென்றோம், அங்கிருந்து மேல் சிகிட்சைக்காக எனது அம்மாவினை ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் என்று சாட்சியம்

அளித்துள்ளார்.

6) அ.சா.4 முத்து செல்வன் தனது சாட்சியத்தில் நான் தற்போது இளைய நயினார் குளத்தில் வசித்து வருகிறேன், நான் விவசாயம் செய்து வருகிறேன், காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான், சுமார் 4, 5 வருடத்திற்கு முன்பு மாலை 4, 5 மணியளவில் இளைய நயினார் குளம், அம்மன் கோவில் அருகில் வைத்து போலீசார் விசாரித்து விட்டு என்னிடமும், ராமலட்சுமி என்பவரிடம் கையொப்பம் பெற்றனர், எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7) அ.சா.7 கிருஷ்ணசாமி தனது சாட்சியத்தில் நான் தற்போது தக்கலையில் வசித்து வருகிறேன், நான் உதவி காவல் ஆய்வாளராக இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன், நான் 2016 ம் ஆண்டு ராதாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்த போது 03-05-2016 ம் தேதி காலை 10.30 மணிக்கு காவல் நிலைய அதிகாரி உத்தரவு படி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த இளையநயினார் குளம், தெற்கூர் கிழத்தெரு நடராஜன் மனைவி, லட்சுமி என்பவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன், நிலையம் 12.30 மணிக்கு வந்து வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.83/2016 இதச பிரிவு 452, 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன், நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரை வாக்குமூலத்தை இணைத்து கனம் வள்ளியூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் திரு.மாரியப்பன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம்

அளித்துள்ளார்.

8) அ.சா.8 மாரியப்பன் தனது சாட்சியத்தில் நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன், இதற்கு முன்பு ராதாபுரம் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் நிலைய குற்ற எண்.83/2016 இ.த.ச. பிரிவுகள் 452, 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 03.05.2016 அன்று 13.30 மணிக்கு சம்பவ இடம்சென்று சாட்சிகள் ராமலெட்சுமி, முத்துசெல்வன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன், பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் லெட்சுமி, செல்வி, தில்லைஅரசி, ஐயம்மாள், சுரேஷ், ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன், பின்னர் வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன், மேற்படி விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகளை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரிகள் திருநெல்வேலி, மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று சென்றுவிட்டார்கள், காயம் பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.அஜிதா ஜீவி என்பவரை விசாரணை செய்து காய சான்று பெற்றேன். அ,,சா.1 க்கு ஏற்பட்ட காயம் சாதராண காயம் என்று சான்று வழங்கினார், அந்த காயச் சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 452, 294(பி), 323, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் 17.02.2017 அன்று குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9) அ.சா.9 அஜிதா ஜீபி தனது சாட்சியத்தில் நான் தற்போது மார்த்தாண்டத்தில் வசித்து வருகிறேன், நான் தற்போது சிஎம்சி கல்லூரியில் முதுநிலை பட்டம் பயின்று வருகிறேன், நான் இதற்கு முன்பு இராதாபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி செய்து வந்தேன், கடந்த 30.04.2016 அன்று காலை 07.40 மணியளவில் பணியில் இருந்த போது லெட்சுமி வயது 46, என்பவர் என்னிடம் சிகிசைக்காக வந்தார், அவரை பரிசோதனை செய்த போது அவரை அடையாள தெரிந்த ஒரு நபர் அன்றைய தினம் 06.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து கையாலும், மரக்கட்டையாலும், அடித்ததாக குறிப்பிட்டார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது, 1) வலது கையில் தொடு வலியும் வீக்ககாயமும் இருந்தது. 2) இடது காலுக்கு அருகே சிராய்பு காயம் இருந்தது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவருடைய காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். காய சான்று(அ.சா.ஆ.7) இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10) **<u>கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்</u>**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

11) **<u>அரசு தரப்பு வாதம்</u>**:

அரசு தரப்பில் அ.சா. 1 முதல் 9 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1,2,4,7,8,9 சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள்.

அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.7 ஆவணங்களின் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிக்கு அதிகபட்ச தண்டணை வழங்கும் படி வாதிடப்பட்டது.

12) **<u>எதிரி தரப்பு வாதம்</u>:**

எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1,2,4 குறுக்குவிசாரணையில் அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.3,5 கண்ணுற்ற சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.6 பார்வை மகஜர் சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். எனவே எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

13) **<u>குற்றச்சாட்டு மீதான விவாதம்</u> :**

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

14) **<u>தீர்வு</u>:**

(i) அ.சா.1,2,4 ல் முதல்விசாரணையில் அரசு தரப்பிற்கு ஆதரவாகவும், குறுக்குவிசாரணையின் போது கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

> அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் "*நான் இளையநயினார்குளத்தில் வசித்து வருகிறேன். நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தது போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார்மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். எதிரியின் பெயர் அனுமானத்தின் பெயரில் தான் இந்த புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்*" என்று

சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் "*நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எல்லாம் போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் தான் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கிற்றும் எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான்*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் "*நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் வாசிக்கவில்லை. போலீசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான்*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) மேலும் மேலே கூறப்பட்ட சாட்சிங்களை கவனமாக பரிசீலனை செய்ததில், அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் "*நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தது போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார்மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்*" என்று கூறியுள்ளார். அ.சா.1ன் சாட்சியம் நம்பகத்தகுந்ததாகவே இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1ன் குறுக்குவிசாரணை அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை. மேலும் அ.சா.2,4 ன் குறுக்குவிசாரணை அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை. அ.சா.3,5 கண்ணுற்ற சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.6 பார்வை மகஜர் சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(iii) எனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம்

முடிவு காண்கிறது.

(iv) இந்நிலையில்,

**1972 (4) SCC 562 SAIT TARAJEE KHIMCHAN AND OTHERS Vs YELAMARTI SATYAM ALIAS SATTEYYA AND OTHERS** இவ்வழக்கில் பாரா நம்பர் 15 ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

> ***The mere marking of an exhibit does not dispense with the proof of***

என்று தீர்ப்பளித்துள்ளது.

மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தினுடைய 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பான **2003 (8) SCC Page No. 245, NARBADA DEVI GUPTA Vs BIRENDRA KUMAR JAISWAL AND ANOTHER** பாரா நம்பர் 16 ;

> ***"The legal position is not in dispute that mere production and marking of a document as exhibit by the court cannot be held, to be a due proof of its contents"***

என்று கூறுகிறது. அதாவது, மேற்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளின்படி ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்ட காரணத்தினால் மட்டுமே அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துக் கொள்ள முடியாது.

15) **முடிவு:**

இந்நிலையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1,2,4 சாட்சிகள் குறுக்குவிசாரணை அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.3,5,6 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்ட காரணத்தினால் அ.சா.1 ன் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதா என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் போது, இந்நீதிமன்றமானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

கொடுத்த முன் தீர்ப்பான ***Vadivelu Thevar vs State of TN AIR 1957 SC 614 wherein held that***

> it is a sound and well – established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely :
> (1) Wholly reliable
> (2) Wholly unreliable
> (3) Neither wholly reliable nor wholly unreliable
> *In case on hand falls the second category of proof, when the PW1 evidence is wholly unreliable it does not require corroboration.*

மேற்கண்ட முன் தீர்ப்பை இவ்வழக்கிற்கு பொருத்தி பார்க்கும்போது பொருந்துவதாக இந்நீதிமன்றம் கருகிறது. மேற்கண்ட முன் தீர்ப்பின் படி அ.சா.1ன் சாட்சியமே நம்பகத்தகுந்ததாகவே இல்லாத போது மற்ற அரசு தரப்பு சாட்சியங்களின் உறுதியூட்டலை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) **இறுதியாக**, அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 452,294(பி),323,506(1) படியும் மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப்படியும் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) **வழக்கு சொத்து மீதான உத்தரவு** :

வழக்கு சொத்துக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே

வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 10-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.10 17:50:37 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர்,

இராதாபுரம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | லெட்சுமி, க/பெ. நடராஜன் |
| அ.சா.2 | தில்லையரசி, க/பெ. முருகன் |
| அ.சா.3 | சுரேஷ், த/பெ. பிச்சை |
| அ.சா.4 | முத்துசெல்வன், த/பெ . ஐயம்பெருமாள் |
| அ.சா.5 | அய்யம்மாள், த/பெ. நடராஜன் |
| அ.சா.6 | ராமலட்சுமி, க/பெ. சுப்பையா கோனார் |
| அ.சா.7 | கிருஷ்ணசாமி, த/பெ. ராமசந்திரன் |
| அ.சா.8 | மாரியப்பன், த/பெ. சிவசங்கரபாண்டியன் |
| அ.சா.9 | அஜிதா ஜீபி, த/பெ. கிளாட்சன் ஜோசப் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 03/05/2016 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம் |

| | |
|---|---|
| அ.சா.ஆ.2 | 03/05/2016 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து அ.சா.4 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | 03/05/2016 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.6 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 03/05/2016 ம் தேதியிட்ட முதல்தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 03/05/2016 ம் தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 03/05/2016 ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**-இல்லை

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.10 17:50:42 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை |